# தமிழ் இலக்கிய வரலாறு

# திருவள்ளுவரும் திருமூலரும்



"எந்த ஓர் இனமும் தன்னுடைய முழுமையான வரலாற்றைத் தெரிந்து, அறிந்து, புரிந்து, நம்பி, ஒப்புக் கொண்டு அதன் பின்னணியில் செயல்படாமல் முழுமையான விழிச்சியோ, எழுச்சியோ, செழிச்சியோ... பெற்றிட்டதில்லை"

**12வது பதினெண்சித்தர் பீடாதிபதி**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரூர்**
**அவர்கள் அருளிய**

# இந்து வேதம்

தமிழர்களின் இந்து வேத மதமான இந்து மதம்

**வைகாசி மாத வெளியீடு (May 2015 - June 2015)**

**மெய்யான இந்துமத ஆண்டு 43,73,116**

காணிக்கை ரூ.10/-

மதவாதிகளால்தான் நாட்டில் அறம் நிறை அருளாட்சியை நிறுவ முடியும்.

# உள்ளுறை

1. திருவள்ளுவரைப் பற்றிய கருத்துக்கள்.
2. திருவள்ளுவரின் கடவுட் கொள்கை.
3. இந்திய நாட்டின் பெயர் பற்றிய கருத்தோட்டம்.

---

## குருபாரம்பரியம் தரும் காலக் கணக்கீடு

| | |
|---|---|
| 400 கோடி ஆண்டுகளுக்கும் மேல் | சூரியனில் இருந்து பிரிந்து வந்த நெருப்புக் கோளம், பனிக்கட்டிக் கோளமாகி, நீர்க்கோளமாகிப் பின் கல் தோன்றி மண் தோன்றிட எடுத்துக் கொண்ட காலம். |
| அனாதிக் காலம் 4,85,920 ஆண்டுகள் | புவியின் நிலப் பரப்பில் பயிரினங்களும், உயிரினங்களும் தோன்றி விலங்குகளோடு வாழும் மணீசர்கள் தோன்ற எடுத்துக் கொண்ட காலம். |
| கீரன் உகம் 17,28,080 ஆண்டுகள் | ஆதிசிவனார் மணீசரை மனிதராக ஆக்கி முதல் அரசு அமைத்து இந்து வேதத்தை தமிழில் அருளினார். ஆதிசிவனார் மகன் முருகனால் இருக்கு வேதம், அசுர வேதம், யாம வேதம், அதர்வான வேதங்கள் எழுதப் பட்டன. பஃறுளியாற்றங்கரை மதுரையை தலைநகராகக் கொண்டு தமிழினம் உலகை ஆண்டது. |
| தீரன் உகம் 12,90,000 ஆண்டுகள் | தமிழினத்தாரின் சூரிய குலத்தார் ஆட்சி. மானுட அரக்கப் போர் நிகழ்ந்தது. மானுடர்கள் வென்று இராமதேவன் ஆட்சி நிகழ்ந்தது. கபாடபுரத்தைத் தலைநகராகக் கொண்டு தமிழினம் உலகை ஆண்டது. |
| தூரன் உகம் 8,64,000 ஆண்டுகள் | தமிழினத்தாரின் சந்திர குலத்தாரின் ஆட்சிக் காலம். கண்ணதேவன் நடத்திய பாரதப் போருக்குப் பின் உகம் முடிந்தது. வைகைக்கரை மதுரையைத் தலைநகராகக் கொண்டு தமிழினம் உலகை ஆண்டது. |
| கலியன் உகம் 4,32,000 ஆண்டுகள் | கலியன் உகம் துவங்கி 2000 ஆண்டுகளுக்குப் பின்னரே தமிழ்மொழி மட்டுமே இருந்த இந்துமத இந்தியாவிற்குள் வடஆரியர் வந்தனர்; சமசுக்கிருதம் பிறப்பிக்கப் பட்டது. இயேசு கிறித்து பிறந்தது கலியன் உகம் 3101ஆம் ஆண்டில். கி.பி. 2015இல் கலியன் உகம் 5116. |

## தமிழிலக்கிய சிறப்பு மலர்

# திருவள்ளுவரைப் பற்றிய கருத்துக்கள்

(1) தமிழ் நாட்டிலுள்ள தலைவர்கள், வழிகாட்டிகள், வழித்துணைவர்கள் என்ற மூன்று நிலையினருமே இனத்துக்கோ, நாட்டுக்கோ, பண்பாட்டுக்கோ நிலையான தொண்டு செய்பவர்களாகவோ, வழங்காதவர்களாகவோதான் இருந்திடுகின்றார்கள். இதற்குக் காரணம் **தமிழ் மொழி அறிவோ, இலக்கிய அறிவோ, வரலாற்று அறிவோ இல்லாதவர்கள்தான் பெரும்பாலும் அனைத்துத் துறைகளிலும் முதல்நிலைச் செயல்வீரர்களாகவும், தலைவர்களாகவும், வழி காட்டிகளாகவும், வழித் துணைவர்களாகவும் இருக்கின்றார்கள்.** எனவேதான், அவர்களால் தமிழ்மொழியின் வளவளர்ச்சிக்கோ, மறுமலர்ச்சிக்கோ, உரிமை மீட்சிக்கோ பாடுபட முடியவில்லை.

இதேபோல் இவர்களால் தமிழின ஒற்றுமைக்கோ, விழிச்சிக்கோ, கிளர்ச்சிமிகு எழுச்சிக்கோ, பயன்மிகு உரிமை மீட்சிச் செழுச்சிக்கோ பாடுபட முடியவில்லை. எனவே, இக்குறைபாடுகள் ஏன் தமிழ்நாட்டில் மட்டும் விடுதலைக்கு முன்னும், விடுதலைக்குப் பின்னும் தொடர்கின்றன என்ற ஆய்வினை முறையாகவும், நிறைவாகவும் செய்த காரணத்தினால்தான் முதலில் தமிழ் மக்களுக்கு தங்களுடைய மொழி வரலாறு (History of the Language), இலக்கிய வரலாறு (History of Literature), தத்துவ வளம் (The fertility, purity and utility of the Tamil Philosophy, Policy, Principle...) ... முதலியவைகளை காலக் கணக்கீட்டு அடிப்படையில் வரலாற்றுச் சான்றுகளையும், ஊன்றுகளையும் வழங்கி விளக்கிடும் பணியை இப்பொழுது அவசர

அவசியமாக விளக்கிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. (Everything should be explained with historical proves and evidences having a chronological approach.)

அதாவது பெரும்பாலான தமிழர்களுக்கு நல்ல வளமான தமிழறிவு ஏற்பட்டு விடுமேயானால் பிறகு தானாகவே வலிமையான தமிழ்மொழிப் பற்று, தமிழினப் பற்று, தமிழ்நாட்டுப் பற்று, இன ஒற்றுமை, தன்மானப் பிடிப்பு, தன்னம்பிக்கை முதலியவை விளைந்திடும், விளைந்திடும், விளைந்திடும்.

இப் பெருநோக்கின், முயற்சியின் முதல் கட்டமே இந்த மாத இலக்கியச் சிறப்பிதழ்.

(2) நமக்கு, அதாவது தமிழருக்கு மூன்று நான்கு பல்கலைக் கழகங்கள் தோன்றி விட்டன. இருந்தும், தமிழின வரலாறோ, தமிழ்ச் சமய வரலாறோ, தமிழ்ச் சமுதாய வரலாறோ, தமிழ் இலக்கிய வரலாறோ, தமிழக அரசியல் வரலாறோ முறையாகவும், முழுமையாகவும் எழுதப்பட்டு தமிழர்களுக்கும், அன்னியர்களுக்குப் பிற மொழிகளிலும் (உலக முக்கிய மொழிகளில் = ஆங்கிலம், பிரஞ்சு, செர்மனி, உருசியா, பிரசியா, சீனம், ...) வழங்கப் பட வில்லை.

அப்படி வழங்கப் பட்டால்தான் **'தமிழர் என்றோர் இனமுண்டு; அவர்களே இந்தியாவின் பூர்வீகக் குடிகள்'** (The Tamilians are the aboriginates of India) என்பதும்; **'தமிழ்மொழிதான் இந்திய மொழிகள் அனைத்துக்கும் தாய்'** என்பதும்; **'தமிழரின் பண்பாடும், நாகரீகமும் இந்தியப் பண்பாட்டுக்கும், நாகரீகத்துக்கும் அடிப்படை'** என்பதும்; உலகத்தவர்களுக்கு தெரிந்திடும்; தமிழர்களுக்குப் புரிந்திடும். இதுவே தமிழின, மொழி, சமுதாய, அரசியல் விழிச்சிகளுக்கும், எழுச்சிகளுக்கும், கிளர்ச்சிகளுக்கும், வளர்ச்சிகளுக்கும், வளவளர்ச்சிக்கும் வழிகோலும்! வழிகோலும்! வழிகோலும்! வழியாய் அமைந்திடும்! அமைந்திடும்! அமைந்திடும்!

இப்பேருண்மையைப் புரிந்த பலரும் வாயில்லாப் பூச்சிகளாக, காவடி தூக்கும் அடிமைகளாக, கைக்கூலி பெற்றுச் செயல்படும் கங்காணிகளாக வாழ்ந்திடுகின்றூர்கள். இந்த அவலத்துக்கும், கேவலத்துக்கும் காரணம் ஆழ்ந்த அகன்ற தமிழ்ப் புலமையும், வளமான வரலாற்றறிவும், உண்மையான தமிழறிவும் உள்ள நல்ல தமிழர்கள் தமிழர்களுக்கு வழிகாட்டிகளாக அமைய முடியாமல் போனதுதான்! போனதுதான்! போனதுதான்!

(3) முச்சங்கங்கள் பற்றியும், சங்க இலக்கியங்கள் பற்றியும், சங்கப் புலவர் பற்றியும்; சங்கத்தை அடுத்துத் தோன்றிய இலக்கியங்களைப் பற்றியும்; புலவர்களைப் பற்றியும் தெளிவான வரலாறு உருவாகிடாமல் தொடர்ந்து செய்திக் (Information) குழப்பங்களையும், காலக் (Periods) குழப்பங்களையும், ஒரே பெயரில் பல ஆசிரியர்கள் என்று பெயர்க் குழப்பங்களையும் ... தொடர்ந்து தமிழ்ப் புலவர்களும், அன்னியர்களும் விளைவித்துக் கொண்டே இருக்கின்றூர்கள். இக்குழப்பங்களை யாருமே தீர்க்க முடியாது, என்றைக்குமே தீராது என்ற **மாயை நிலையை தமிழின விரோதிகளும், துரோகிகளும், கைக்கூலிகளும், கங்காணிகளும் உருவாக்கி வருகின்றூர்கள்**. இதை அப்பாவித் தமிழர்களும் நம்பி வருகின்றூர்கள்.

(4) இந்த மாயை ஒரு தற்காலிகமான மாயை. சதிகாரர்களால் நன்கு திட்டமிடப்பட்டு, நன்கு உருவாக்கப்பட்டு, தொடர்ந்து கட்டிக் காக்கப்பட்டு வரும் ஒரு மாயை! ஏனென்றூல், இந்த மாயை முழுமையாக அகற்றப்பட்டு விட்டால் உண்மையான தமிழ்மொழிப் பற்று, தமிழ் இனப்பற்று, தமிழ் நாட்டுப்பற்று, தமிழின ஒற்றுமை, தமிழ்ப் பண்பாட்டுப் பற்று, தமிழ் நாகரீக ஈர்ப்பு, தமிழ்நாட்டு மான உணர்வு, தமிழினத் தன்னம்பிக்கை உணர்வு முதலிய அனைத்தும் 'விழித்தெழுந்த வேங்கை குகையை விட்டு வெளிக் கிளம்புவது போல்' வளவளர்ச்சி பெற்று தழைத்தெழுந்து விடும்.

எனவேதான், அரசோ, பல்கலைக் கழகங்களோ, தமிழுக்கென்று உருவான மடங்களோ, தமிழின் பெயரால் உருவான கழகங்களோ,

சங்கங்களோ, தமிழால் வாழும் பெரிய பெரிய அமைப்புக்களோ, தனிமனிதர்களோ ... செய்ய நினைக்காத, செய்ய முன்வராத இலக்கியப் பணிகளை **இந்து மறுமலர்ச்சி இயக்கம்** செய்யத் துவங்கியிருக்கின்றது. இதனைத் தெரிந்து, அறிந்து, ஆராய்ந்து, புரிந்து, தெளிந்து, உணர்ந்து, நம்பி நமது இயக்கத்தை ஏற்றுப் பேராதரவு நல்கும் நிலை தமிழர்களிடையே எந்த அளவு வளவளர்ச்சியும், வலிமைப் பொலிவும் பெறுகின்றதோ; அந்த அளவுதான் இந்துமத விடுதலை, இந்துமதத்தின் மூலவரான தமிழரின் விடுதலை, இந்துமதத்தின் ஆட்சிமொழியான தமிழ்மொழியின் விடுதலை, இந்துமதத்தின் உடலாகவும், உயிராகவும் இருக்கின்ற தமிழ்ப் பண்பாட்டுக்கு விடுதலை, இந்துமதம் கூறுகின்ற உலக ஆன்ம நேய ஒருமைப்பாடும், உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயமும் விளைந்திடும், விளைந்திடும், விளைந்திடும்.

(5) இப்படி ஒரு நெடிய பெரிய முன்னுரையுடன்தான், திருவள்ளுவரைப் பற்றிய கருத்துக்களைக் கூற முன்வர வேண்டியிருக்கின்றது. ஏனெனில், பதினெண்சித்தர்களும், பதினெண்சித்தர் பீடாதிபதிகளும், 48 வகைச் சித்தர்களும் தருகின்ற செய்திகள் (Siddhar's Information) என்று தனித்துப் பட்டியலிட்டுத்தான் கூற வேண்டியிருக்கின்றது. அதாவது, இன்றைக்கு நாட்டு நடப்பில் உள்ள அனைத்துத் துறை வரலாறுகளுமே தமிழினத் துரோகிகளாலும், விரோதிகளாலும், எதிரிகளாலும், குறையறிவு படைத்தவர்களாலும்; ஆராய்ச்சிக் கண்ணோட்டம் இல்லாதவர்களாலும்தான் எழுதப் பட்டிருக்கின்றன! எழுதப் பட்டிருக்கின்றன! எழுதப் பட்டிருக்கின்றன!

இதைத் தெளிவாகச் சொல்ல வேண்டுமென்றால் தமிழ்மொழி அறிவு, தமிழிலக்கிய அறிவு, தமிழ்ப் பண்பாட்டுக் கூறுபாட்டு அறிவு, நாகரீக அடிப்படை அறிவு, சமய உயிரோட்ட அறிவு, சமுதாய கட்டமைப்பு அறிவு, ... முதலியவற்றில் போதுமான அளவு கூட (necessary and fundamental knowledge)

இல்லாதவர்கள்தான் நமது வரலாறுகளை எழுதி உள்ளார்கள். எனவே அனைத்து வரலாறுகளுக்கும் மூலமாக, தாயாக, ஆரம்பமாக, கருவாக, அடிப்படையாக, சான்ருக, ஊன்ருக, ... விளங்குகின்ற தனிப்பெரும் இலக்கியங்களையும், இலக்கியக் கலைஞர்களையும் பற்றிய உண்மையான செய்திகளை சித்தர்களின் செய்திப் பின்னணியில் வெளியிடும் பணியே துவக்கப் பட்டிருக்கின்றது.

இதன்படி, நான்கு யுகங்களிலும் வாழ்ந்திட்ட இலக்கியங்களும், இலக்கிய ஆசிரியர்களும் விமரிசிக்கப்பட்டே தீருவார்கள். முதல் உகத்தில் சிவன்கள், பிறமண்கள், இந்திரன்கள், தேவேந்திரன்கள், இயமண்கள், நாரதர்கள், இருடிகள், முனிகள், ... தமிழ்ச் சங்கத்துக்குத் தலைவனுக இருந்த சிவபெருமான், அவன் மகன் முருகன் ... முதலிய இலக்கியக் கலைஞர்களைப் பற்றியும், இலக்கியங்களைப் பற்றியும் விமரிசிக்கப்படும். இது பற்றிய ஓரளவுச் செய்திகள் நமது குருதேவர் ஏட்டில் வெளிவந்து கொண்டிருக்கின்றது. இந்த கீரன் உகத்தை அடுத்து வந்த தீரன் உகத்திலும், தூரன் உகத்திலும் வாழ்ந்த இலக்கியக் கலைஞர்களின் பட்டியல் முறையே 'யக்ஞவல்லி'யை பின்னணியாகக் கொண்டும்; 'தன்வந்திரி'யைப் பின்னணியாகக் கொண்டும் ஏற்கனவே பல கட்டுரைகள் வந்து விட்டன. எனவே, இந்த நான்காவது உகமான கலியன் உகத்தின் பட்டியல்தான் இந்த மலரிலிருந்து துவங்குகின்றன.

(6) "... இந்த கலியுகம் பிறந்து ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்குப் பிறகுதான் இந்துமதத்துக்கும்; இந்துமத மொழியான தமிழுக்கும், இந்துமத மூலவர்களான தமிழர்களுக்கும், இந்துமத வாழ்வியலான தமிழ்ப் பண்பாட்டிற்கும், தமிழ் நாகரீகத்துக்கும் அனைத்து வகையான நலிவுகளையும், மெலிவுகளையும், சிதைவுகளையும், சீரழிவுகளையும், கலக்கங்களையும், குழப்பங்களையும், இழிவுகளையும், அழிவுகளையும் வழங்கிட்ட <u>பிறமண்ணினரான பிருமணர்கள் எனப்படும் வடஆரியர்</u> இந்துமத நாடான இந்தியாவுக்குள் புகுந்தனர். அவர்கள், 'காட்டு யானைகள் கரும்புத் தோட்டத்திற்குள் புகுந்து அழித்தது

போல்', 'குரங்குக் கூட்டம் பழமரச் சோலைக்குள் புகுந்தது போல்', 'எலிக் கூட்டம் விளைந்த காய்கறித் தோட்டத்திற்குள் புகுந்தது போல்', 'நரிக் கூட்டம் ஆட்டுமந்தைக்குள் நுழைந்தது போல்'; தமிழினத்தில் புகுந்து மொழி, இலக்கியம், இனம், நாடு, பண்பாடு, நாகரீகம், சமுதாயம், சமயம், கலை, ... முதலிய அனைத்துத் துறைகளையும் பாழாக்கி விட்டார்கள் ..."

என்று பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள் இந்த முன்னுரையைக் கூறியே முதன்முதலில் குருபாரம்பரியம் எழுதத் துவங்குகின்றார். இப்படிக் கூறியே இவர் இந்துமதத்தையும், தமிழ்மொழியையும், தமிழினத்தையும், தமிழ்நாட்டையும் பாதுகாக்கும் முயற்சியை வரலாற்று வடிவில் துவக்குகின்றார்.

அதாவது, சமுதாய வரலாற்றை <u>இலக்கியப் பாரம்பரியம்</u> என்றும்; (The Social History of Tamils is written as the History of the Language and Literature), சமய வரலாற்றை <u>குருபாரம்பரியம்</u> என்றும் (The History of Religion), நாட்டு வரலாற்றை <u>அரச பாரம்பரியம்</u> என்றும் (The Political History) முப்பெரும் பிரிவுகளாகப் பிரித்து எழுதுகின்றார். இவையல்லாமல் வாக்குகள், வாசகங்கள் என்ற பெயரில் எண்ணற்ற செய்திகள் தொகுக்கப்பட்டு உள்ளன. காலப்போக்கில் நாயன்மார்கள், ஆழ்வார்கள், வள்ளலார்கள், மௌனகுருக்கள், தாயுமானவர்கள், பட்டினத்தார்கள், சந்தான ஆச்சாரியார்கள், ... முதலியோர்கள் எண்ணற்ற வரலாற்றுச் செய்திகளை சுவைமிகு இலக்கியங்களாக ஆக்கி விட்டுச் சென்றிருக்கிறார்கள். எனவே, இலக்கியங்களுக்கும், இலக்கியவாதிகளுக்கும் மிக முக்கியமான, தெளிவான, பயன்மிகு, உண்மையான வரலாறுகளை எழுதுவோம்! எழுதுவோம்! எழுதுவோம்!

(7) திருவள்ளுவரை ஒரு **நவநாத சித்தர்** என்று பதினெண்சித்தர் பீடாதிபதிகளும், மற்ற சித்தர்களும் குறிக்கின்றார்கள். ஆச்சாரியார்களும், சன்னிதானங்களும், புராண எழுத்தாளர்களும் திருவள்ளுவரை **<u>நாயனார்</u>**

என்று குறிக்கின்றனர்கள். இவற்றிற்கிடையில், சமண சமயத்தவர்கள் தங்களின் குருமார்களில் ஒருவராகக் குறிக்கின்றனர்; புத்தர்கள் இவரைத் தங்களின் மதத் தலைவர்களுள் (தலைமைப் பிச்சுக்களில் அல்லது மடாதிபதிகளுள்) ஒருவராகத் துணிந்து கூறுகின்றனர்கள்.

எனவே, திருவள்ளுவரின் சொந்த வாழ்க்கை, வாழ்ந்த காலம், கூறிய தத்துவம், அல்லது ஏற்றுக் கொண்ட தத்துவம், ... முதலியவையே முதலில் தீர்க்க முடியாத மிகப் பெரிய சிக்கல்களையும், குழப்பங்களையும், மயக்கங்களையும் வழங்குகின்றன. இவற்றைத் தீர்த்துக் கொண்ட பிறகு இவர் எழுதிய நூல்களில் இவருக்குப் பெரும்புகழ் ஈட்டித் தந்துள்ள திருக்குறள் மூலம் இவர் வழங்கும் கருத்துக்கள் முதலியவை ஆராயப்பட வேண்டும்.

நல்ல காலமாக தமிழினத் தலைவர், சிந்தனை ஊற்று, பகுத்தறிவுப் பகலவன், தன்னம்பிக்கையின் இமயம், தமிழர் தன்மானங் காக்க சுயமரியாதை இயக்கம் கண்ட தந்தை பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் எடுத்த மாபெரும் முயற்சிகளால் திருவள்ளுவரின் பெயரும், திருக்குறள் பெயரும் அரசு முதல் அன்னக்காவடி மடம் வரை அனைவருக்கும் தெரிந்த ஒன்றாக ஆகிவிட்டன. எனவே, நாம் தாராளமாக நேரிடையாக திருவள்ளுவர் பற்றியும், திருக்குறளைப் பற்றியும் கூறலாம்.

(8) சித்தர்களின் கருத்தோட்டத்திலும், கண்ணோட்டத்திலும் நவநாத சித்தர்கள் என்று திருவள்ளுவரும், திருமூலரும் சேர்த்தே பேசப்படுகின்றனர்கள். அதாவது **திருமூலர் சமயத்துக்காகவும், திருவள்ளுவர் சமுதாயத்துக்காகவும்** வாழ்வின் ஒன்பது வகைச் சுவைகளை இனிய இசையாக, இசைமிகு இலக்கியமாக, நிலையான இலக்கிய வாழ்வாகப் படைத்துக் கொடுத்திருக்கிறார்கள் என்பதே சித்தர்களின் கருத்து.

(9) யாம் ஏற்கனவே திருமூலர் வரலாறு விரிந்த அளவில் நிறைந்த கருத்துக்களோடு எழுதி முடித்துள்ளோம். அதனை திருமூலருக்கே உரிய மடாதிபதிகளுக்குத் தெரிவித்தும் வெளியிட

முடியாத நிலையிலேயே இருக்கின்றோம். அவர் திருமந்தரம், திருமந்திரம், திருமந்திறம் எனும் மூன்று வகையான நூல்களை உலகறிய எழுதியிருந்தும் அவருடைய திருமந்திரமும், திருமந்திறமும் இரண்டறக் கலந்த ஒரு நூல் மட்டும்தான் இன்றைக்கு நாட்டு வழக்கில் உள்ளது. அவர் வாழ்க்கை வரலாற்றையும் மிகப்பெரிய நூலாக எழுதியுள்ளோம். இருந்தும் திருமூலரின் பெயரால் கோடிக்கணக்கான சொத்துக்களை வைத்துக் கொண்டிருக்கும் திருவாவடுதுறை ஆதீனம், சித்தர்கள் திருமூலரைப் பற்றிக் கூறும் கருத்துக்களைக் கேட்கவோ, பரப்பவோ தயாராக இல்லை! இல்லை! இல்லை! இதுவே இன்றைய தமிழகத்தின் நிலை. நல்லகாலமாக திருவள்ளுவருக்கு என்று மடம் ஏதுமில்லை. எனவே, நமது கருத்துக்களை நாமே துணிந்தும், வரையறுத்தும், திட்பமாகவும், நுட்பமாகவும் உரைக்கலாம்.

(10) பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதியின் காலம் கி.மு.100 முதல் கி.பி.150 வரை என்று மிகத் தெளிவாக வரையறை செய்யப்படுவதாலும்; <u>இவர் வளர்த்த இம்மண்ணுலகின் 47வது தேவகுமாரனாகத் தோன்றிய செருசலத்து ஈசா</u> (Jerusalem Jesus Christ) இவரிடம் ஒன்பது வயது முதல் 27 வயது வரை ஆக 18 ஆண்டுகள் பயிற்சிகள் பெற்ற போது 'சங்க இலக்கியங்களும், திருக்குறளும், திருவள்ளுவரின் நூல்களும், திருமூலரின் நூல்களும், சித்தர்களின் இலக்கியங்களும், மற்ற நவநாத சித்தர்களின் புராணங்களும், கதைகளும், காதைகளும், கவிதைகளும், கீதைகளும் முறையாகக் கற்றிட்டார்' என்ற குறிப்பு இருப்பதாலும்; திருவள்ளுவரின் காலம் கி.மு.வுக்கு உரியதே ஆகும்.

[பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி அமராவதியாற்றங்கரைக் கருவூரரின் அருளாணைப்படியும், குருவாணைப்படியும் செயல் படாததால்தான் 47வது தேவகுமாரனை ஈசன் எனப்படும் ஈசா => ஏசா => இயேசு எனப் பெயர் பெற்ற **ஏசுநாதர் சிலுவையில் மாண்டு, மீண்டு, உயிர்த்தெழுந்தார்**. அப்படி உடலோடு உயிர்த்தெழுந்த

ஏசு, தமிழகத்துக் கரூர் அமராவதியாற்றங்கரை வட்டாரத்தில் நெடுங்காலம் வாழ்ந்தார் என்பதால்தான் இவர் அடியார்களில் சிலர் இந்தியாவுக்கு வந்து தேடிக் கண்டுபிடித்து அவருடன் வாழ்ந்தனர். அவர்களில் ஒருவரே **'புனித தாமசு'** (Saint Thomas) ஆவார்.

இந்த 47வது தேவகுமாரன் ஒரு சீவன்முத்தன்; அருவுருவ சித்தியாளன். பிறரை நம்ப வைப்பதற்காகத் தனக்குக் கிடைத்த தெய்வீகச் சத்திகளையெல்லாம் குருவாணையை மீறிச் செலவிட்டு விட்ட காரணத்தினால்தான் உடல் சிதைந்து, குருதி கொட்டி மூன்று நாட்கள் மரணமென்னும் துக்கத்தில் ஆழ நேரிட்டது என்ற குறிப்பும் குருபாரம்பரியத்தில் உள்ளது. இவருக்கு அடுத்து வரும் 48வது தேவகுமாரன் 'அந்திக் கிறித்து' (The Last Christ) தமிழகத்தில்தான் தோன்றுவார், தமிழினத்தில்தான் தோன்றுவார் என்று மிகத் தெளிவாகக் குருபாரம்பரியத்தில் குறிக்கின்றார்கள்.]

(11) திருவள்ளுவரைக் குறிக்கும் போதும் சரி, அவருடைய நூல்களில் சிறந்த திருக்குறளைக் குறிக்கும் போதும் சரி; அவரைச் சங்கப் புலவர்களுள் ஒருவராகக் குறிப்பதும் இல்லை; சங்க நூல்களில் ஒன்றாகவும் குறிப்பதும் இல்லை. ஏனெனில், அவர் சங்க காலத்தில் மற்ற அனைவரோடும் சேராத ஒரு புதுச் சிந்தனையாளராக (A New Thinker, that is to say, a revolutionary thinker who stood against all the odd conventions, traditions, customs and manners. So, he was a different thinker or a writer.) அன்றைய சமுதாயத்தின் பழம்பெரும் கொள்கைகளுக்கும், கோட்பாடுகளுக்கும், மரபுகளுக்கும் எதிர்ப்பாளராக இருந்திட்டார்.

எனவேதான், அவர் எழுதிய பல நூல்கள் செல்வாக்குப் பெற முடியாமலேயே போய்விட்டன. எனவேதான், அவர் கடைசியாகத் தன்னுடைய கொள்கைகள் அனைத்தையும் குறுகிய, நன்கு வடிவப் படுத்தப்பட்ட குறட்பாக்களாக எழுதிப் பத்துப் பத்து குறட்பாக்களாகத் தொகுத்து தலைப்பிட்டு வகை செய்து அறநூலாக, நீதிநூலாக,

சமயச் சாரமாக வெளியிட்டார். இதற்கு, தமிழகம் முழுவதும் இருந்த புலவர்களின் எதிர்ப்பு இருந்தது. தமிழ்ச் சங்கம் இவர் நூலை ஏற்றுக் கொள்ளவில்லை.

ஆனால், இவர் தனது கொள்கைகளுக்காக புத்தரைப் போலவோ, மகாவீரரைப் போலவோ தன்னுடைய தத்துவத்திற்கு வாரிசையும், வழித்துணையையும், பெரிய போராட்டக் குழுவையும் உருவாக்கவில்லை. அதாவது, தனது தத்துவத்துக்கு என்று தனிக் கூட்டத்தையோ, இயக்கத்தையோ உருவாக்கவில்லை. குறைந்த அளவு கிரேக்கத்தில் சாக்கரடீசு தன்னைச் சுற்றி மாணவக் கூட்டத்தை உருவாக்கியது போலக் கூட உருவாக்கவில்லை. எனவேதான், இவர் பெயரால் ஒரு மதமோ, தத்துவக் கூட்டமோ வாழையடி வாழையாக உருவாக முடியாமல் போய்விட்டது. இது அவருக்கு ஒரு மாபெரும் தோல்விதான்.

அவருடைய கருத்துக்கள், சிந்தனைகள், ... முதலிய அனைத்துமே தமிழரின் அகப்பண்பாட்டிற்கும், புறநாகரீகத்துக்கும், இலக்கிய மரபுக்கும் பெரிய சவாலாக அமைந்திட்டன. எனவேதான், திருவள்ளுவர் சமய அளவிலோ, சமுதாய அளவிலோ, இலக்கிய அளவிலோ மிகப் பெரிய வெற்றியினை, தொடர் வாரிசு நிலைகளை, ஒப்புதலைப் பெற முடியாமல் போய்விட்டது. கிரேக்கத்தில் சாக்கரடீசும், வடநாட்டில் புத்தரும், மகாவீரரும், சீனத்தில் கன்பூசியசும், பாரசீகத்தில் சொராசிட்டரும் புதிய சிந்தனைகளைத் தோற்றுவித்துச் செயல்பட்ட காலத்தில்தான் திருவள்ளுவர் புதிய சிந்தனைகளைத் தோற்றுவித்து செயல்பட்டார் என்பது பொருத்தமுடையதாக இருக்கின்றது. இதுபற்றி மேலும் நமது கருத்துக்களைத் தொடர்வோம்.

**//உண்மை நகல்//**

**//இதன் மூல நகல்: வேம்படிதாளம் சித்தரடியான் திரு சீனிவாசன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது. இந்தக் கட்டுரை 1985இல் குருதேவரால் எழுதப் பட்டது.//**

# திருவள்ளுவரின் கடவுட் கொள்கை

திருவள்ளுவர் பதினெண்சித்தர்கள் அமுதத் தமிழ்மொழியில் வழங்கிய இந்துமதத்தை அப்படியே முழுமையாக ஏற்றுக் கொண்டவர். எனவே, அவருடைய திருக்குறளில் அன்றைக்கு, அதாவது அவர் காலத்தில் உலகம் முழுவதும் பரவியிருந்த இந்துமதத்தின் தத்துவ விளக்கமாகவே கருத்துக்களைக் கூறியுள்ளார். இப்பேருண்மையினை உணராதவர்கள்தான் திருவள்ளுவர் காலத்திற்குப் பிறகு தோன்றிய புத்தமதம், சமணமதம், கிறித்துவ மதம், வைணவநெறி, ... முதலியவைகளின் கருத்துக்களைத் திருவள்ளுவர் கூறுவதாகத் தவறாகக் கருதுகிறார்கள். அதாவது, இன்றைக்கு உலகில் உள்ள அத்தனை மதங்களுக்கும் முந்தியவரே திருவள்ளுவர்.

இதனைத் தெளிவாகச் சொல்ல வேண்டுமென்றால் புத்தமதத்திலும், சமண மதத்திலும் தங்களுடைய கொள்கைகளையும், கோட்பாடுகளையும் சுருக்க விளக்கக் கருத்துச் சொற்றொடர்களில் [Definitions, Verses in short form] எழுதித் தொகுத்திடும் முயற்சி திருக்குறளைப் பார்த்துத்தான் தோற்றுவிக்கப்பட்ட ஒன்றாகும். ஏனெனில், திருவள்ளுவர் சங்க இலக்கியங்கள் போல் ஆசிரியப்பாக்களில், கலிப்பாக்களில், வஞ்சிப்பாக்களில், வெண்பாக்களில் எழுதிய நூல்கள் ஏராளமாக உண்டு.

அவர் 120 வயது வரை வாழ்ந்து 120ஆவது வயதில்தான் திருக்குறளை அரங்கேற்றினார் என்றும்; அதற்குப் பிறகு, வடக்கு நோக்கிப் பயணமாகி கடற்கரைக் கோயில் ஒன்றில் எட்டு ஆண்டுகள் நிட்டையில் இருந்து எண்ணற்ற தத்துவ நூல்கள், சமயச் சாரங்கள் எழுதிக் குவித்த பிறகே சித்தர்களுக்கே உரிய நிலவறை நீள்தவத்தில் நிறைந்தார். இப்படி அவர் நிலவறைக்குள் நிறைந்த இடம்

திருவொற்றியூராகவோ, சென்னை மயிலாப்பூர் கபாலீசுவரர் கோயில் வட்டாரமாகவோ இருக்கலாம் என்று குருபாரம்பரியம் கூறுகிறது. ஆக திருவள்ளுவர் 128 ஆண்டுகள் உயிர் வாழ்ந்திருக்கிறார் என்ற பேருண்மை குருபாரம்பரியத்திலிருந்து தெரிகிறது.

மிகத் தெளிவாக திருவள்ளுவரின் கீதை, திருமூலரின் கீதை, யக்ஞவல்லியின் கீதை, ஆதியக்ஞவல்லியின் கீதை, கம்பரின் கீதை, ஆதிக்கம்பரின் கீதை, வால்மீகியின் கீதை, ஆதிவால்மீகியின் கீதை, தன்வந்திரி கீதை, ஆதிதன்வந்திரி கீதை, க**ண்ண**ன் கீதை, க**ன்ன**ன் கீதை, பெருந்தேவனார் கீதை, ஆதிப்பெருந்தேவனார் கீதை, தொல்காப்பியர் கீதை, ஆதித்தொல்காப்பியர் கீதை, அகத்தியர் கீதை, ஆதிஅகத்தியர் கீதை, நக்கீரர் கீதை, ஆதிநக்கீரர் கீதை, ... என்ற நூல்கள் சிறப்பாகப் பாராட்டப் படுகின்றன குருபாரம்பரியத்தில். மேலும் இக்குருபாரம்பரியத்தில் மேலே குறிப்பிட்ட அனைவரும் **நவநாத சித்தர்கள்** என்று குறிக்கப்படுகின்றனர். அத்துடன் ஒட்டு மொத்தமாக இந்த நவநாத சித்தர்களின் கதைகளும், காதைகளும் (காப்பியம்), காவியங்களும் சுவைமிக்கவை என்று பாராட்டப் படுகின்றன.

"திருமூலரையும், திருவள்ளுவரையும் **சமயத்துக்கும் சமுதாயத்துக்கும்** இலக்கண இலக்கியம் கண்ட தெய்வப்பாவலர்" என்று சிறப்பிக்கும் சொற்றொடர் பத்தாவது, பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதிகளின் குருபாரம்பரியத்திலும், இலக்கிய பாரம்பரியங்களிலும், அரசபாரம்பரியங்களிலும், மற்ற வாக்குகளிலும், வாசகங்களிலும், வாக்கியங்களிலும் பலமுறை திருப்பித் திருப்பிக் கையாளப் பட்டிருக்கின்றது. எனவே, திருவள்ளுவரும், திருமூலரும் தொல்காப்பியரைப் போல் மொழிக்கும், இலக்கியத்திற்கும் இலக்கண நூல் எழுதியிருக்கின்றனர் என்று கருத வேண்டியிருக்கின்றது.

திருவள்ளுவரும், திருமூலரும் பல இலக்கியங்கள் எழுதியிருக்கின்றார்கள் என்ற செய்தியும் சித்தர்களின் நூல்களில் தாராளமாகக் காணப்படுகின்றது. இவற்றின் அடிப்படையில் பார்க்கும்

போது திருவள்ளுவரும், திருமூலரும் **கி.மு.9ஆம் நூற்றுண்டில்** பிறந்திருப்பர் என்று எண்ண முடிகிறது. ஆனுல், திருமூலரைப் பற்றி அவர் 300 ஆண்டுகள் வாழ்ந்தார் என்ற செய்தியொன்று இருக்கிறது.

இச்செய்திக்குத் துணையாகவே குருபாரம்பரியத்தில் "... கலியொடு கலி தீர்க்க திருமூலனும் தோன்றினுன்" என்ற குறிப்பு மிகத் தெளிவாக குருபாரம்பரியத்திலும், இலக்கிய பாரம்பரியத்திலும் இருக்கிறது. இதன்படிப் பார்த்தால் திருமூலர் 128 ஆண்டுகளே வாழ்ந்த திருவள்ளுவருக்கு முன்பே தோன்றி அவருக்குப் பின்னும் வாழ்ந்திருப்பார் என்று எண்ண வேண்டியிருக்கின்றது. இதே செய்தி கலியுகத்தின் வரலாறு கூறும் சித்தர்களின் நூல்களில் மிகத் தெளிவாக இருக்கிறது.

11வது பதினெண்சித்தர் பீடாதிபதி தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய குருமகாசன்னிதானம் சித்தர் கருவூரர் அவர்களும், அவரது மகன் கருவூர்த் தேவனும், பேரன் திருமாளிகைத் தேவனும் திருவாவடுதுறையில் உள்ள திருமூலரின் நிலவறைக் குகைக் கோயிலில் பூசை செய்த விவரங்களும்; அவர்கள் திருமூலரைப் பற்றிப் புகழ்ந்து கூறிட்ட செய்திகளும், வாசகங்களும் குருபாரம்பரியம், இலக்கிய பாரம்பரியம், மூவர் உலா அல்லது மூவர் தோற்றம், கருவறை உயர்கோபுரக் கோயில்கள், அருட்பேரரசு ... முதலிய பல நூல்களில் இருக்கின்றன. எனவே, திருமூலரின் வரலாற்றை நன்கு ஆராய்ந்தால், அதில் திருவள்ளுவரின் வரலாறு மிகத் தெளிவாகவும், திட்டவட்டமாகவும் கிடைக்கும்! கிடைக்கும்!! கிடைக்கும்!!!

கருவூரர் வழி வந்த கண்டப்பக்கோட்டைச் சித்தர் உ.இராமசாமிப் பிள்ளை அவர்கள் தெய்வப்பாவலர் திருமூலரையும், திருவள்ளுவரையும் தெய்வமெனா வழிபட்ட குறிப்புக்களும், செய்திகளும் நிறைய இருக்கின்றன. எனவே, இவர் மேற்படி திருமூலர், திருவள்ளுவர் பற்றிக் கூறும் கருத்துக்கள் ஏற்றுக் கொள்ளத் தக்கனவே. இவை

ஏளனம்பட்டியார் வரலாற்றில் விளக்கப் படுகின்றன என்பதால் இக்கட்டுரையில் திருமூலர் காலத்தையும், திருவள்ளுவர் காலத்தையும், இவர்களின் இலக்கண இலக்கியங்களையும் ஆராயப் போகிறவர்கள்; சித்தர் ஏளனம்பட்டியாரின் எழுத்துக் குவியலையும் எண்ணிப் பார்க்க வேண்டும் என்பதற்காகவே இக்கட்டுரையில் மேற்படிச் செய்திகளைக் குறித்தோம்.

சித்தர் காகபுசுண்டர் ம.பழனிச்சாமி பிள்ளை அவர்கள்தான் ஓலைச் சுவடிகளிலிருந்து எண்ணற்ற எழுத்துக் குவியல்களை தாளில் எடுத்து எழுதினார். எனவே, இவர் சித்தர்களின் நூல்களைப் பற்றிக் குறிப்பிடும்போது; "... சித்தர்களின் நூல்களில் **'இலக்கணப் பெரும்புலவர் திருமூலர்'**, **'இலக்கணப் பெரும்புலவர் திருவள்ளுவர்'**, **'கண்ண தேவன் போல் 27 வண்ணங்களில் இலக்கியங்களைப் படைத்த திருமூல தேவனார், திருவள்ளுவ தேவனார்'**... என்ற சொற்றொடர்கள் என்னென்ன செய்திகளை வழங்குகின்றன என்பதை முறையாகவும், நிறையாகவும் ஆராய்ந்தால் தமிழிலக்கிய, இலக்கண வரலாறு பல பெரிய அரிய மாற்றங்களோடு முற்றிலும் புதிதாகவே எழுதப்பட வேண்டியிருக்கும் ..." என்று குறிப்பிடுகின்றார் என்ற செய்தியை குறித்துக் கொள்ள விரும்புகிறோம் யாம்.

நவநாத சித்தர்கள் அம்மையப்பனை வழிபடுபவர்களே. அதாவது சத்தியான பெண் தெய்வத்தையும், சிவனான ஆண் தெய்வத்தையும், பெண் ஆண் என்று வரிசைப்படுத்தி வணங்குபவர்களே நவநாதசித்தர்கள். இவர்களை ஒட்டித்தான் நவகோடி சித்தர்கள், நான்மறைச் சித்தர்கள், நான்முறைச் சித்தர்கள், நான்நெறிச் சித்தர்கள், நான்வேதச் சித்தர்கள், ... எனப்படும் மற்ற 47 வகைச் சித்தர்களும் முதலில் பெண்ணையும், பிறகு ஆணையும் வணங்குகின்ற அம்மையப்பன் வழிபாட்டை; சத்தி சிவன் வழிபாட்டை (சத்திலிங்க வழிபாட்டை) ... மேற்கொண்டு கடைப்பிடித்து உய்பவர்களாகவே

இருக்கின்றார்கள். ஆனால், பதினெண்சித்தர்கள் மட்டும்தான் முதலில் ஆணும், பிறகு பெண்ணும் என்ற ரீதியில் 'சிவன் சத்தி' என்ற வழிபாடாக (சிவலிங்கம் = சிவசத்திலிங்கம்) நிகழ்த்துகிறார்கள்.

அதாவது பதினெண்சித்தர்களே **"தாத்தாக்களே போற்றி; ஆத்தாக்களே போற்றி!"** என்று முதலில் ஆணையும், பின் பெண்ணையும் முறைப் படுத்தி வழிபடுகிறார்கள். இவர்களுடைய கருவழி வாரிசுகளும், குருவழி வாரிசுகளும்தான் இப்படிச் சிவலிங்க வழிபாட்டைத் தங்களது பூசாமொழி வாசகங்களில் **தாத்தாக்களே போற்றி! ஆத்தாக்களே போற்றி!** என்பதன் மூலம் தொடர்ந்து நிலைநாட்டி வருகிறார்கள்.

திருவள்ளுவர் நவநாத சித்தர் என்பதால் முதலில் பெண்ணையும், பிறகு ஆணையும் முறையாக வைத்தே தனது இலக்கண இலக்கியங்களைப் படைத்தார். அவர் படைத்தனவற்றில் திருக்குறள் ஒன்றுதான் உலகறிய காணக் கிடைக்கின்றது என்பதால், திருக்குறளில் கடவுள் வாழ்த்தைச் சான்றாகக் கொண்டே திருவள்ளுவர் ஒரு நவநாத சித்தர்தான் என்ற கருத்தை முடிவு செய்யலாம். அதாவது, அவருடைய கடவுள் வாழ்த்தில்,

***"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி***
***பகவன் முதற்றே உலகு"***

- என்ற திருக்குறளில் ஆதி என்று பெண்ணை முதலிலும், பகவன் என்று ஆணை இரண்டாவதாகவும்தான் குறிக்கின்றார்.

இங்கு பிறமண்ணினரான பிருமணர்களான வடஆரியர்கள் ஆதி என்பது திருவள்ளுவரின் தாய் பெயரென்றும், பகவன் என்பது திருவள்ளுவரின் தந்தை பெயரென்றும் சூழ்ச்சியாகக் கூறிச் சதி வேலை செய்திருக்கிறார்கள். அதாவது, இந்துமதத்தைத் தோற்றுவித்த பதினெண்சித்தர்களில் பகலவன் எனப்படும் [பகவன் அல்லது பகவான்] சூரியனை வழிபடும் காகபுசுண்டர் பரம்பரை என்ற ஒன்றும்; சந்திரனை [ஆதி = திங்கள் = படைப்புக்குத் தேவையான அனைத்துச் சத்திகளையும் வழங்கும் சந்திரனே ஆதி என்பது

பதினெண்சித்தர்களின் இந்துமதச் சொல்] வழிபடும் கருவூரார் என்றொரு பிரிவும் என்று இரண்டு பிரிவுகள்தான் உண்டு.

இவர்களில் சந்திரனை வழிபடும் கருவூரார்கள்தான் தந்தரம், தந்திறம், தந்திரம், தாந்தரம், தாந்தரீகம், எந்தரம், எந்திறம், எந்திரம், ஏந்தரம், ஏந்தரீகம், ... என்பனவற்றைச் செய்து இந்துமதத்திற்கு ஆதியாக உள்ள 48 வகையான வழிபாட்டு நிலையங்களையும், வழிபடு நிலையினர்களையும், அருளாளர்களையும், அருட்பட்டத்தார்களையும், ... உருவாக்குபவர்கள். எனவே, சந்திரனை வழிபடுவது கருவூரார்களை வழிபடுவதாகும். கருவூரார்கள் தங்களுடைய அனைத்து வகையான பத்தி, சத்தி, சித்தி, முத்திப் பூசைகளையும், ஏழுபருவத்துப் பெண்களைப் பயன்படுத்திச் செய்யும் தாந்தரீகப் பூசையின் மூலம்தான் நிறைவு செய்து கொள்வார்கள். எனவே, கருவூராரை வழிபடுவது பெண்ணை வணங்குவதாகும். மேலும், பதினெண்சித்தர்களின் தத்துவப்படி சந்திரன் பெண்தன்மை நிறைந்த, அதாவது தாய்மையாற்றலை உடைய ஒளியை வழங்குகின்ற ஒன்றாகும். எனவே, பதினெண்சித்தர்களின் புராண இதிகாசக் கருத்துக்களில் சந்திரனைப் பெண்ணாகவே உருவாக்கப் படுகின்றன.

அதனால்தான், நவநாத சித்தரான திருவள்ளுவர் சந்திரனைக் குறிக்கும் ஆதி என்ற சொல்லைப் பெண்ணைக் குறிக்கும் சொல்லாக ஏற்றுத் திருக்குறளில் பயன்படுத்தி யுள்ளார்.

**குறிப்பு:-** பிறமண்ணினரான பிராமணர்களான வடஆரியர்கள் தங்களுடைய வேதமத அடிப்படையில் உருவாக்கிய *பொய்யான ஹிந்துமதத்*தின் புராண, இதிகாசங்களில் சந்திரனை ஆணாகவும், அவனுடைய மனைவிகளாக 27 விண்மீன்களையும் உருவகம் செய்துள்ளனர். இது ஒரு பெரிய குறிப்பிடத்தக்க கருத்தாகும். இக்கருத்து **மெய்யான இந்துமத**த்துக்கும், *பொய்யான ஹிந்துமத*த்துக்கும் இடையேயுள்ள முரண்பாட்டையும், மாறுபாட்டையும், வேறுபாட்டையும் விளக்குகின்றது.

பகலவன் = கதிரவன் = சூரியன் = ஆதவன் ... என்று பதினெண்சித்தர்களின் நூல்களிலே தெளிவாக நூல்விளக்கம் கொடுக்கப் பட்டிருக்கின்றது. இந்தப் பகலவன் என்ற சொல்லே இடைக்குறையால் பகவன் என்ற சொல்லாகத் திரிந்தது என்ற குறிப்பும் பதினெண்சித்தர்களின் நூல்களில் உள்ளது. பதினெண்சித்தர்களின் இந்துமதத் தத்துவம் சூரியனை ஆண்தன்மை மிக்க ஒன்று என்று குறித்து; அனைத்துப் புராண இதிகாசங்களிலும் **சூரியனை ஆணாகவே** உருவகம் செய்துள்ளன. மேலும், சூரியனை வழிபடுகின்றவர்கள் அல்லது சூரிய குலத்துக்குரியவர்கள் என்று கருதப்படும் சித்தர் காகபுசுண்டர் எனும் காக்கையர்கள் பதினெண்சித்தர்களில் பகற்காலத்தில் செயல்படுகிறவர்களாகவே இருக்கிறார்கள்.

அதாவது, இவர்கள் சந்திரனுக்குரிய இரவுக் காலத்தில் செயல்படும் கருவூரார்கள் படைத்திடும் அனைத்து வகையான கருவறைகளையும், கருவறை நிலையினர்களையும் மந்திரம், மந்திறம், மந்தரம், மாந்தரம், மாந்தரீகம் எனும் ஐந்தின் மூலம் பாதுகாத்துப் பேணிடுபவர்களாகவே இருக்கின்றார்கள். இவர்கள் சூரியனை ஆணாகவே கருதி அனைத்து வழிபாடுகளையும் செய்கிறார்கள்.

எனவேதான், திருவள்ளுவர் நவநாத சித்தரின் பண்பாட்டுக்கேற்ப பெண்ணைக் குறிக்கும் ஆதி என்ற சொல்லை முதலில் சொல்லி ஆணைக் குறிக்கும் பகவன் என்ற சொல்லை இரண்டாவதாகக் கூறி தனது நூலின் ஆரம்பமான முதல் குறட்பாவில் <u>அம்மையப்பன்</u> வழிபாட்டை நிகழ்த்துகிறார். இப்படியாகத் திருவள்ளுவர் தனது திருக்குறளின் முதல் குறட்பாவிலேயே **தன்னை ஒரு நவநாத சித்தர்** என்று தெளிவுபடுத்திக் கொள்கிறார். எனவே, திருக்குறளில் உள்ள கருத்துக்கள் நவநாத சித்தர்களின் கருத்துக்களேயாகும்.

பதினெண்சித்தர்கள் படைத்த இந்துமதத்தில் உள்ள 48 வகையான சித்தர்களும் அவரவர் விருப்பப்படி 48 வகையான வாழ்வியல் தத்துவங்களை, சித்தாந்தங்களை, நெறிமுறைகளை, மரபுகளை, பழக்க வழக்கங்களை, கொள்கைகளை, குறிக்கோள்களை, ... கருத்துச்

சுதந்திரத்தோடு வெளியிட்டிருப்பதைக் காணலாம். இப்பேருண்மையினைப் புரியாதவர்கள்தான் நவநாதச் சித்தர்நெறி, நவகோடிச் சித்தர்நெறி, நான்மறைச் சித்தர்நெறி, நான்முறைச் சித்தர்நெறி, நான்நெறிச் சித்தர்நெறி, நான்வேதச் சித்தர்நெறி, ஞானசித்தர் நெறி எனும் ஏழு சித்தர் நெறிகளையும் வானில் தெரியும் வானவில்லின் ஏழு வண்ணங்களுக்கு ஒப்பிட்டு; இந்துமதத்தின் ஏழு வகை நெறிகள் என்று குறிப்பிட்டு இந்துமதத்தில் ஏழு அருளாறுகள், ஏழுவகைப் பாதைகள், ஏழுவகைத் தத்துவங்கள், ஏழுவகை வழிபாடுகள், ஏழுவகை சித்தாந்தங்கள், ஏழுவகைச் சித்தி முறைகள் ... என்று பலவாறு குறிப்பிடுகின்றுர்கள்.

அதாவது, இந்துமதத்தில் மண், பெண், பொன், இறைச்சி, குருதிப்பலி, இறைச்சியுணவுப் படையல், மது அருந்துதல், உருவ வழிபாடு, அருவ வழிபாடு, முத்தீ ஓம்பல், ஐந்தீ வேட்டல், ... முதலியன பற்றிப் பலவகையான வாழ்வியல் நெறிக் குழப்பங்கள் தோன்றியிருக்கின்றன. இவை அனைத்தும் பதினெண்சித்தர்களால் உருவாக்கப்பட்ட 48 வகையான சித்தர்களின் சொந்த விருப்பு வெறுப்புக்களால் விளைந்தவையேயாகும்.

இந்துமதத்தில் 48 வகையான சித்தர்களும் 48 வகையான தத்துவங்களைக் கூறிய போதிலும்; இவை அனைத்தும் வந்து கலக்கும் பெருங்கடல் போன்றதே பதினெண்சித்தர்களின் தத்துவமான **இந்துமத**மாகும். எனவே, நவநாத சித்தரான திருவள்ளுவர் சங்க கால இலக்கியங்கள் கூறும் அகப் பண்பாட்டையும், புற நாகரீகத்தையும் எதிர்ப்பது போல், ... கூறியிருக்கும் கருத்துக்கள் நவநாத சித்தர் எனப்படும் பிரிவினருக்கு (ஒரு வகைச் சித்தருக்கு) உரியவையேயாகும்.

அதாவது **பல பெண்களுடன் வாழுதல், இறைச்சியுணவு உண்ணுதல், பலி கொடுத்துப் பூசை செய்தல், பல தெய்வங்களை வணங்குதல், மதுவகைகளைப் பருகுதல், களியாட்டங்களில் ஈடுபடுதல், காமம் மிகுந்து வாழுதல், பொருளாசையோடு வாழுதல், ...**

முதலியவைகளை யெல்லாம் திருவள்ளுவர் கண்டிக்கிறார் என்று கருதத் தேவையில்லை. இக்கருத்துக்கள் நவநாத சித்தர்களுக்கே உரியவை.

திருமூலரின் சமயக் கருத்துக்களில் பல பதினெண்சித்தர்களின் உண்மையான இந்துமதக் கருத்துக்களோடு ஒத்துப் போகாதவை போலத் தெரியும். அதாவது,

‘உருவ வழிபாட்டைக் கண்டித்தல்’,

‘தீ வளர்த்தப் பூசையைக் கண்டித்தல்’,

‘பலி கொடுத்துப் பூசை செய்வதை மறுத்தல்’,

‘பல தெய்வ வழிபாட்டை மறுத்தல்’,

‘சித்தர்கள் வகுத்த 48 வகைக் குலங்களை மறுத்து ஒன்றே குலம் என்று கூறுதல்’,

‘சித்தர்கள் பட்டியலிட்டுக் காட்டுகின்ற முப்பத்து மூவாயிரம் கோடி தேவர்கள், ஆயிரங்கோடி தேவதைகள், 243 ஆயிரங்கோடி தேவியர்கள், 48 ஆயிரங்கோடி இருடிகள், 96 ஆயிரம் கோடி கணங்கள், 108 ஆயிரங்கோடி முனிவர்கள், ... என்ற பட்டியல் முழுவதையுமே மறுத்து ஒருவனே தேவன் என்று கூறுதல்’;

‘பதினெண்சித்தர்கள் உருவாக்கிய 108 திருப்பதிகளையும், 243 சத்தி பீடங்களையும், 1008 சிவாலய பீடங்களையும், கணக்கற்ற 48 வகைக் கருவறைகளையும் மறுத்து வழிபாட்டு இடம் எதுவும் தேவையே இல்லை என்று கூறுதல்’

... முதலியவற்றைக் கூறலாம். இவை அனைத்தும் உண்மையிலேயே பதினெண்சித்தர்களின் இந்துமதத்திற்கு மறுப்பானவையோ, வெறுப்பானவையோ, எதிர்ப்பானவையோ அல்ல! அல்ல! அல்ல! அதாவது, இந்துமதத்திற்கு உட்பட்ட 48 வகைச் சித்தர்களின் தத்துவங்களில் நவநாத சித்தர்கள் என்ற ஒரு பிரிவினரின் தத்துவமே மேலே குறிப்பிட்ட திருமூலரின் கருத்துக்கள்.

எனவே, பதினெண்சித்தர் பீடாதிபதிகள் தோன்றிடும் பொழுதுதான் 48 வகைச் சித்தர்களின் சொந்த விருப்பு வெறுப்புகளுக்கேற்ப கூறப்படும் கருத்துக்களையும் ஒருமுகப் படுத்தித் திருத்திப் பதினெண்சித்தர்களின் அண்டபேரண்டங்கள் ஆளும் இந்துமதத்தின் மெய்யான, முறையான, முழுமையான வடிவமைப்புக்கள் உருவாக்கப்படும்.

எனவே, பதினெண்சித்தர் பீடாதிபதிகள் ஒவ்வொருவரும் தங்கள் தங்களுடைய காலத்தில் உள்ள குறைகளுக்கும், முறைகேடுகளுக்கும், தவறுகளுக்கும், பிழைகளுக்கும், தேய்வுகளுக்கும், ஓய்வுகளுக்கும், திரிபுகளுக்கும், முறிவுகளுக்கும், ... உரிய பரிகாரங்களைச் செய்வதற்காகவே மீண்டும் குருபாரம்பரியம், இலக்கிய பாரம்பரியம், அரசபாரம்பரியம், கருவாக்கியம், கருவாசகம், குருவாக்கியம், குருவாசகம், தருவாக்கியம், தருவாசகம், திருவாக்கியம், திருவாசகம், அருள்வாசகம், மருள்வாசகம் ... முதலிய பலவகைப்பட்ட இலக்கியங்களைப் படைத்து **<u>ஏட்டுலகப் புரட்சியைச்</u>** செய்கின்றார்கள்.

இதைப்போலவே பதினெண்சித்தர் பீடாதிபதிகள் தங்கள் தங்கள் காலத்து மக்களுடைய அறிவு, ஆர்வம், ஆற்றல், உழுவலன்பு, உண்மை ஊக்கம், நம்பிக்கை, பத்தி, முயற்சிநிலை, பயிற்சிநிலை, ... முதலியவைகளுக்கேற்ப மக்களிடையே பலரைத் தேர்ந்தெடுத்து இட்டும் தொட்டும் சுட்டியும் அருள்வழங்கி சித்தரடியான்கள், சித்தரடியாள்கள், சித்தரடியார்கள், ஆர்வலர்கள், ஆதரவாளர்கள், விருப்பாளர்கள், நம்பிக்கையாளர்கள், பதிலிகள், மகன்கள், மகள்கள், குருவழி வாரிசுகள், உரிமைச் சுற்றங்கள், ... எனப்படும் அருளுலக வாரிசுகளை உருவாக்கி நாட்டு நடப்பில் **<u>நாட்டுலகப் புரட்சியைச்</u>** (நாட்டு நடப்பில் புரட்சியை) செய்கிறார்கள்.

இவற்றைப் புரியாதவர்கள், புரிந்து கொள்ள முடியாதவர்கள், நாத்திகர்கள், மதமறுப்பாளர்கள், மதவெறுப்பாளர்கள் ... முதலியோர் பதினெண்சித்தர்கள் தோற்றுவித்ததுதான் இந்துமதம் என்ற

பேருண்மையைத் தெரிந்து கொள்ள முடியாதவர்களாகவே ஆகிவிடுகிறார்கள்.

எனவேதான், அவர்கள் பதினெண்சித்தர்களின் உண்மையான இந்துமதத்திற்குள் 48 வகைச் சித்தர்களின் கருத்துக்களை மோதவிட்டு குழம்பித் தவிப்பார்கள். இப்படித்தான் திருமூலரையும், திருவள்ளுவரையும் பதினெண்சித்தர்களின் இந்துமதத்திற்கு மாறானவர்களாகவும், வேறானவர்களாகவும், எதிரானவர்களாகவும், சீர்திருத்த வாதிகளாகவும் ... கருதிடும் தவறான கருத்து பிறந்தது.

எனவே, திருமூலரும், திருவள்ளுவரும் கூறும் கருத்துக்கள் பதினெண்சித்தர்களின் இந்துமதத்திற்கு உட்பட்டவையேதான். அதாவது, ஒரே ஆறிலிருந்து பிரியும் 48 வகையான சிற்றாறுகள், 48 வகையான வழிகளில் ஓடி வகை வகையான பயிரினங்களை விளைவிப்பது போன்றதாகும். அனைத்துப் பயிரினங்களும் உயிரினங்களின் நலவாழ்வுக்கும், வாழ்வின் வளர்ச்சிக்கும் பயன்படுபவையே ஆகும். இதுபோலவே, 48 வகைச் சித்தர்களும் தங்கள் தங்களின் சொந்த விருப்பு வெறுப்புகளுக்கேற்ப கூறுகின்ற கருத்துக்கள் அனைத்தும் உருவாக்கும் அருட்பயிரினங்கள் இந்துமதத்தின் நலவாழ்வுக்கும், வளவளர்ச்சிக்குமே பயன்படுகின்றன! பயன்படுகின்றன! பயன்படுகின்றன!

**//உண்மை நகல்//**

**//இதன் மூலம்: அச்சிட்ட 'குருதேவர்' அறிக்கைகளிலிருந்து எடுக்கப்பட்டது. 1985இல் வெளியாகிய இந்த 'குருதேவர்' அறிக்கை எண்கள்: 19, 21, 22, 24//**

# இந்திய நாட்டின் பெயர் பற்றிய கருத்தோட்டம்

**கி.பி.1772இல் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தையும், அதன்கீழ் 48 வகையான நிறுவன நிருவாகங்களையும் தோற்றுவித்த கருவூரர் வழிவந்த கண்டப்பக் கோட்டைச் சித்தர் ஏளனம்பட்டியார் உ.இராமசாமிப் பிள்ளை அவர்களின் கருத்துக் குவியல்களில் இருந்தும்; பாரம்பரிய மரபுப்படியும் உரிமைப்படியும் இ.ம.இ.க்கு ஏளனம்பட்டியாருக்குப் பிறகு தலைவராகப் பொறுப்பேற்ற முடிகண்ட சோழபுரம் எனப்படும் முடிகணத்து (கரூர் வட்டம், திருச்சி மாவட்டம்) காக்கா வழியன் பண்ணையாடியான சித்தர் காகபுசுண்டர் எனும் சித்தர் காக்கையர் ம.பழனிச்சாமி பிள்ளை அவர்களின் கருத்துக் குவியல்களிலிருந்தும் தொகுக்கப்பட்ட ஒரு சில கருத்துக்கள்.**

(1) இந்துமதத்துக்குரிய மக்கள் வாழுகின்ற நாடு என்ற பொருளிலேதான் **இந்தியா** என்ற பெயர் ஏற்பட்டது.

(2) இன்றுள்ள ‘சிந்து’ என்ற ஆறு இளமுறியாக் கண்டத்தில் ‘இந்து’ என்றே அழைக்கப் பட்டிருக்கிறது. அந்த ஆறு இளமுறியாக் கண்டத்தில் இருந்த பனிமூடிய மலையான தென் இமயமலையிலிருந்து உற்பத்தியாகி ஓடியது. அதைச் சுற்றி மிகுந்த வளமான பகுதிகள் இருந்தன. அந்த ஆற்றங்கரையிலேதான் பதினெண்சித்தர்கள் தங்களுடைய இந்துமதத்திற்குரிய உலகியல் படியான சாத்திரச் சம்பிறதாயங்களையும், சடங்குகளையும், திருவிழாக்களையும் செய்யும் பூசாறி குரு குருமார் குருக்கள் ஆகிய நால்வரைத் தயாரிக்கும் அருட்பள்ளிகளையும்; சாத்திரிகள், ஐந்திறத்தார், மந்திறத்தார், தந்திறத்தார், எந்திறத்தார், தோத்திரியார் (ஓதுவார்) எனும் ஆறுவகையினரையும் தயாரிக்கும் 48 வகையான கருவறைகளையும், 48 வகையான வெட்டவெளிக் கருவறைகளையும் உருவாக்கி ; நிருவாகம் செய்யக் கூடிய அருட்கலை வல்லார்களை உருவாக்கும்

பல்கலைக் கழகங்களையும் உடைய **<u>அருட்பா</u> (அரப்பா) <u>நகரை</u>**யும்; இதேபோல், முழுக்க தவநிலைக்குரிய ஐந்தீ வேட்டல், முத்தீ ஓம்பல், சுருதி ஆரண ஆகம மீமாம்சைகளைக் கற்றல், 1. சூத்தரம், 2. சூத்திரம், 3. சூத்திறம், 4. சாத்தரம், 5. சாத்திரம், 6. சாத்திறம், 7. அத்தரம், 8. அத்திரம், 9. அத்திறம், 10. தோத்தரம், 11. தோத்திரம், 12. தோத்திறம், 13. வேத்தரம், 14. வேத்திரம், 15. வேத்திறம், 16. நான்மறை, 17. நான்முறை, 18. நானெறி, 19. நான்வேதம், 20. நவநாதங்கள், 21. பதினெண்சித்தங்கள், 22. முப்பத்தாறு போதங்கள், 23. தொண்ணூற்ருறு ஓதங்கள் ... முதலிய (இங்கு மேலும் பட்டியலிட்டுக் காட்டப்பட வேண்டிய நான்குகள் குருவழியின்றி பெயரளவில் கூட தெரிந்து கொள்ளக் கூடாது என்பதால் தெரிவிக்கப் படவில்லை) இருபத்தேழு வகையான அகப்பக்குவ அருட்கலைகளைப் பயிலும் இடமாக, பொருளுலக மோகங்களெல்லாம் கடந்து அருள்மோகம் மட்டும் உடைய ஒரு நகரமாக **<u>மோகம் சிதரு நகர்</u> (மொகஞ்சதாரோ நகர்)** எனும் இரண்டையும் உருவாக்கி யிருந்தார்கள்.

எனவே, <u>இந்து என்ற மதத்தின் தலைமைக்குரிய இடம்</u> இந்து ஆற்றங்கரையில் அமைக்கப்பட்டது. அதைச் சுற்றியிருந்த பகுதிகளெல்லாம் <u>இந்தியா</u> என்றே அழைக்கப்பட்டது. “இந்த இந்து நாடு 48 நாடுகளை உள்ளடக்கியதாக இருந்தது” என்ற செய்தி குருபாரம்பரியம், அரசபாரம்பரியம், இலக்கிய பாரம்பரியம் முதலியவைகளிலிருந்து தெரிகிறது.

(3) இந்த இந்தியா என்ற பெயர் சித்தர்களின் இலக்கியங்களில் இந்து நாடு, இந்து தேசம் என்ற பெயர்களில் குறிக்கப்படுகிறது.

(4) தேசு = ஒளி,

தேசம் = ஒளி மிகுந்த இடம் => அதாவது மக்கள் காடுமேடுகளைத் திருத்திச் செப்பனிட்டு ஒளி நிறந்த வாழ்க்கை வாழுகின்ற இடம். இந்து என்ற ஆறு மிகுந்த பேரொலி (Sound) எழுப்பிக் கொண்டு ஓடக்கூடிய ஒன்ருக இருந்தது. அந்த ஒலி இனிமையான இசையொலி போன்று (Musical Sound) இருந்தது.

எனவேதான், இந்த இந்து என்ற ஆறு காலப்போக்கில் சிந்து என்று அழைக்கப்பட்டது.

(5) இதே இந்து என்ற ஆறு எல்லாவிதப் பயிரினங்களுக்கும், உயிரினங்களுக்கும் தண்ணீரால் உயிரூட்டி வளர்த்தது. எனவே, இதுவே அனைத்து உயிரினங்களுக்கும் உயிரணுவாக இருந்தது என்று பொருள்பட விந்து என்ற பேரிலும் அழைக்கப்பட்டது.

(6) இதே இந்து என்ற ஆறு சோலைகளும், தோட்டங்களும், கழனிகளும் நிரம்பப் பெற்று மிகவும் அழகாக இருப்பதால் இனிமை (இனிமையாறு, இனியாறு); தேன் (தேனாறு), அழகு (அழகாறு), உயிர் (உயிராறு) ... என்று பல பெயர்களைப் பெற்றிருக்கின்றது. இந்தப் பெயர்களெல்லாம் இந்துமதத்திற்குரிய பொருள் விளக்கச் சொற்களாகவே இருந்து வருகின்றன. எனவேதான், இளமுறியாக் கண்டத்தில் இருந்த 48 நாடுகளும் இந்த இந்து ஆற்றங்கரையிலிருந்த அருட்பா நகரையும், மோகம் சிதரு நகரையும் தலைமையாகக் கொண்டு அருளாட்சி செய்யுமாறு செய்யப் பட்டிருக்கின்றன.

(7) இளமுறியாக் கண்டத்திலிருந்த தென் இமயமலையிலிருந்து உற்பத்தியான ஆறுகளிலே இந்த 'இந்து' என்ற ஆறுதான் மிகப்பெரிய ஆறாகவும், அருளாட்சித் திருநகரங்களைத் தனது கரையிலே பெற்றிருந்த ஆறாகவும், தெய்வீகத் தன்மை மிக்க புனித ஆறாகவும் கருதப்பட்டது. எனவேதான், இளமுறியாக் கண்டமே இந்துக் கண்டம் என்று சில இடங்களில் குறிக்கப் படுகின்றது. அதனால்தான் <u>புதிதாகத் தோன்றிய</u> பனிமூடிய வட இமயமலையிலிருந்த பெரிய ஆறு இந்து என்று பெயரிடப்பட்டது. வட இமயமலையை எல்லையாகக் கொண்ட பரந்த நிலப்பரப்பு <u>இந்துநாடு</u> என்று அழைக்கப்பட்டது. அதுவே காலப்போக்கில் மாறி <u>இந்தியா</u> என்று அழைக்கப்பட்டது.

(8) இப்படி மிகத் தெளிவாக நான்கு யுகங்களுக்கு முன்பிருந்தே; அதாவது, இளமுறியாக் கண்டத்திலிருந்தே இந்து என்ற சொல்லும், இந்துமதமும் மிகத் தெளிவான தத்துவங்களோடும், செயல் சித்தாந்தங்களோடும், சாத்திரத் தோத்திரங்களோடும்,

சம்பிறதாயங்களோடும், சடங்கியல்களோடும், புராண இதிகாசங்களோடும், அருள் நிலையங்களோடும், அருளாளர்களோடும் மிகத் தெளிவான வடிவமைப்போடும், வளமான நெறிமுறைகளோடும், வலிமையான சட்டதிட்டக் கட்டுப்பாடுகளோடும் வாழ்ந்து வந்திருக்கிறது, வாழ்ந்து வந்திருக்கிறது, வாழ்ந்தே வந்திருக்கின்றது.

இதற்குரிய எல்லாவகையான சான்றுகளும், ஊன்றுகளும் பதினெண்சித்தர்கள், பதினெண்சித்தர் பீடாதிபதிகள், பதினெட்டாம்படிக் கருப்புகள், 48 வகைச் சித்தர்கள், எண்வகை மூல ஆச்சாரியார்கள், 13 வகைக் கருவழி ஆச்சாரியார்கள், 13 வகைக் குருவழி ஆச்சாரியார்கள், 48 வகைப் பதினெண்சித்தர் பீடாதிபதிவழி ஆச்சாரியார்கள், 48 வகை அருளாளர்கள் முதலியோர்களின் எழுத்துக் குவியல்களில் ஏராளமாகக் கிடைக்கின்றன, கிடக்கின்றன.

(9) இவற்றையெல்லாம் தமிழன் எண்ணிப் பார்த்துத் தன்னுடைய மதத்திற்குரிய பெயர் '**இந்துமதம்**' என்று தெளிவோடும், துணிவோடும் உலகறியக் கூற வேண்டும். மேலும், ஒவ்வொரு தமிழனும், '**இந்து என்ற சொல் ஓர் உயர்தனிச் செந்தமிழ்ச் சொல்**' என்ற பேருண்மையை எங்கும் எப்பொழுதும் சொல்லிக் கொண்டேயிருக்க வேண்டும்.

இவற்றிற்கெல்லாம் மேலாகப் பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரர் அவர்கள் தமது குருபாரம்பரியத்தில்;

"... அனாதி காலத்திலேயே பதினெண்சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்பர்களும் அண்டபேரண்டமாளும் இந்துமதத்தைப் பற்றி அதனுடைய அண்டபேரண்ட அருளுலக ஆட்சிமொழியான அமுதப் பைந்தமிழ் மொழியில் வழங்கியுள்ள நெடிய பெரிய விளக்கங்களின் சுருக்க விளக்கக் கருத்துக்களாக யாம் தொகுத்து வழங்கும் இந்துமத விளக்கம், பூசாமொழி, பூசாவிதி, இந்துமதச் சாரம், இந்துமதத் தத்துவம், இந்துமதச் செயல் சித்தாந்தம், இந்துமத வாழ்வியல், இந்துமத வரலாறு, இந்துமதப் புராணங்கள், இந்துமத எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம், ... முதலிய

குறிப்பிட்ட சில நூல்களையாவது கோயில் ஊழியர்களாகத் தொண்டு புரியும் 48 வகையினரும் கற்றுத் தேர்ந்து புலமை பெற்றிடல் வேண்டும். அப்பொழுதுதான், நாட்டு நடப்பில் வாரத்தில் சில நாட்களாவது அவரவர் பிறந்த கிழமை, அருளுலகப் பொருளுலக நலம் வேண்டும் கிழமை என்று குறிப்பிட்ட சில நாட்களிலாவது அவரவர் ஊரிலுள்ள ஏதாவது ஒரு வழிபாட்டு நிலையத்திற்குச் சென்று வழிபாடு செய்யும் பழக்கம் பொதுமக்களிடையே ஏற்பட்டிடும்.

மேலும், குருவழிச் சித்தி வேண்டுபவர்கள் வியாழக் கிழமையிலும், சத்திவழிச் சித்தி வேண்டுபவர்கள் வெள்ளிக் கிழமையிலும், சிவன்வழிச் சித்தி வேண்டுபவர்கள் ஞாயிற்றுக் கிழமையிலும், முருகன் வழிச் சித்தி வேண்டுபவர்கள் செவ்வாய்க்கிழமை அல்லது திங்கட்கிழமையிலும், மாயோன்வழிச் செயல்படுபவர்கள் சனிக்கிழமையிலும், பிறமண் வழிச் செயல்படுபவர்கள் புதன்கிழமையிலும், தேவலோகத்தின் தேவர், தேவதை, தேவியர், அமரர், வானவர், விண்ணவர், கின்னரர், கிம்புருடர், கந்தர்வர், முனிவர், இருடி, ... முதலியோரை வணங்கித் தேவ சேனாதிபதியான முருகன் வழிச் செயல்பட விரும்புபவர்கள் செவ்வாய்க்கிழமையிலும் முறையே வழிபட்டால் நல்லது என்ற சிறப்பு விதியின்படி பொதுமக்களிடையே மேற்குறிப்பிட்ட நாட்களில் ஏதேனும் ஒரு வழிபாட்டு நிலையத்தில் அந்தந்தக் கிழமையில் அந்தந்த வழிபாட்டுக்குரியவர்கள் ஒருங்கு கூடி கூட்டு வழிபாடு செய்யும் பழக்கம் ஏற்பட்டிடும்.

அப்பொழுதுதான், கோயில்களில் உள்ள 48 வகையான ஊழியக் காரர்களுக்கும், அவரவரின் ஏட்டறிவுகளுக்கும், பட்டறிவுகளுக்கும், பயிற்சிகளுக்கும், முயற்சிகளுக்கும், அருளுலகத் தேர்ச்சி முதிர்ச்சிகளுக்கும் ஏற்ப உரிய பெரிய மரியாதைகள் பொதுமக்களிடமிருந்து கிடைத்திடும். அதோடு எல்லாவிதமான உதவிகளும், பாதுகாப்புக்களும் காலந்தவறாமல் போதுமான அளவு எல்லாவகையான கோயில்களுக்கும், எல்லாவிதமான கோயில் ஊழியர்களுக்கும் கிடைத்திடும். அத்துடன் 48 வகையான வழிபாட்டு

நிலையங்களும் கட்டிடப் புதுப்பிப்பு, கருவறைப் புத்துயிர்ப்பு, நன்கொடை வழங்கல் நிதி... முதலிய அனைத்தும் விரிந்தும் விரைந்தும் நாடெங்கும் பரவலாக நிகழ்ந்திடும். அதனால், எல்லாவிதமான வழிபாட்டு நிலையங்களும் அருட்படையின் பாடிவீடுகளாகவும், பாசறைகளாகவும் ஆகிடும். மேலும், அமையப்போகும் அருளாட்சிக்காக அனைத்து வகையான வழிபாட்டு நிலையங்களும் வலிமையான அரண்களை உடைய அருளாட்சி நிருவாகக் கோட்டை கொத்தளங்களாக, அரண்மனைகளாக ஆகிடும்.

அப்படியெல்லாம் செயல்நிலை வளர்வதற்கு அடிப்படையாக அனாதி காலத்திலேயே ‘இந்து’ என்ற சொல்லுக்குப் பொருள் கூறும் சொற்களாகக் கூறப்பட்ட நாற்பத்தெட்டு சொற்களையும் பத்தியுள்ளம் படைத்த அனைவரும் மனப்பாடம் செய்து வைத்துக் கொண்டு எங்கும் எப்பொழுதும் எல்லாரிடத்தும் எடுத்துக் கூறி ‘**இந்து என்ற சொல் தமிழ்ச் சொல்தான்**’ என்ற பேருண்மையை அனைத்துத் தமிழரும் புரியுமாறு செய்திடல் வேண்டும். அதன்பிறகுதான், **இந்துமதம்தான் தங்களுடைய மதம் அல்லது தங்களுடைய மதம்தான் இந்துமதம்** என்ற நம்பிக்கை எல்லாத் தமிழருக்கும் ஏற்பட்டிடும். இந்த நல்ல நம்பிக்கையின் அடிப்படையில்தான் தமிழர்களின் ஒற்றுமையும், ஒருமைப்பாடும் விளைந்திடும்! விளைந்திடும்! விளைந்திடும்! அல்லது விளைவிக்கப் பட்டிடும்! விளைவிக்கப் பட்டிடும்! விளைவிக்கப் பட்டிடும்! அதன்பிறகே தமிழ்மொழி விடுதலை, தமிழின விடுதலை, தமிழ்ப் பண்பாட்டு விடுதலை, தமிழ் நாகரிக விடுதலை, பிறமண்ணினரான பிருமணர்களிடமிருந்து தமிழ்ச் சமுதாய விடுதலை, வடஆரியர்களின் சமசுக்கிருத வேதமதத்திலிருந்து தமிழரின் தமிழ்மொழிக்குரிய **மெய்யான இந்துமத**த்திற்கு விடுதலை... என்று அனைத்து வகையான விடுதலைகளும் செயலாகிடக் கூடிய அரிய பெரிய வாய்ப்புக்கள் உருவாகிடும், உருவாகிடும், உருவாகிடும்.

அதாவது, தமிழ்மொழியிலுள்ள **மெய்யான இந்துமத**த்தின் வரலாற்றுப் பேருண்மைகளும், வாழ்வியல் நடைமுறைகளும், மெய்யான இலக்கியங்களும், உண்மையான அருளாளர்களும், அருளாட்சிக்குரிய

வாரிசுகளும், அருளாற்றலை வழங்க வல்ல அருட்கலைகளும் முறையாக வெளிப்படல் வேண்டும் அல்லது வெளிப்படுத்தப் படல் வேண்டும். அவற்றின் அடிப்படையிலே கருத்துப் புரட்சி, எண்ணப் புரட்சி, சிந்தனைப் புரட்சி ... முதலியவை வளவளர்ச்சி பெற்று இந்துமத மறுமலர்ச்சிப்பணி மாபெரும் வெற்றியினைப் பெற்றிடல் வேண்டும்.

எனவே, **தமிழர்கள் தங்கள் மதத்தை இந்துமதம்** என்றும், **குமரி முதல் இமயம் வரை உள்ள நாட்டை இந்துநாடு** என்றும், **தமிழர்கள் தங்களை இந்துக்கள்** என்றும் தெளிவாகவும், வெளிப்படையாகவும் குறிப்பிட்டுக் கொள்ளும் பொற்காலம் உருவாக வேண்டும். இதுவே தமிழர்க்கும், தமிழ்மொழிக்கும், தமிழ்நாட்டிற்கும் நற்காலமாகும், நற்காலமாகும், நற்காலமாகும்.

எனவே, தமிழின விடுதலைக்காகவும், தமிழ்மொழி விடுதலைக்காகவும், இந்துமத விடுதலைக்காகவும் பழைய கற்கோயில்களையும், சொற்கோயில்களையும் புதுப்பிப்பதோடு புதிய புதிய கற்கோயில்களையும், சொற்கோயில்களையும் உருவாக்க வேண்டும். இவற்றிற்காகக் கற்றோரையும், மற்றோரையும் தயாரித்த பழைய சொற்கோயில்களை மக்களிடையே செல்வாக்குப் பெறச் செய்வதோடு; புதியபுதிய சொற்கோயில்களை மக்களிடையே உலாச் செய்துவரச் சொல்ல வேண்டும்.

இவ்வாறு நெடிய பெரிய தொடர் செயல்திட்டங்களோடு பூசாறி, குரு, குருமார், குருக்கள் என்பவர்களாவது கட்டுப்பாட்டுடன் நூற்றுண்டுக் கணக்கில் செயல்பட்டால்தான் பதினெண்சித்தர்களின் சித்தர்நெறியான சீவநெறியெனும் **மெய்யான இந்துமதம்** பிழைக்கும், தழைக்கும், செழிக்கும், பயன்நல்கும் ...”

என்று குறிக்கின்றார். இக்குருபாரம்பரிய வாசகத்தை அனைவருக்கும் நினைவுபடுத்துகிறோம்.

**//உண்மை நகல்//**

**//இதன் மூல நகல்: சித்தரடியார் சுந்தரானந்தாவின் கையெழுத்தில் கிடைத்தது.//**

# இந்து மத வரலாற்றுப் பேருண்மைகள்

**பிறப்பிடம்:** இளமுறியாக் கண்டம் (The lost Lemuria) எனும் கடலுள் மறைந்த ‘குமரிக்கண்டம்’.

**காலம்:** பதினெண்சித்தர்களால் அனாதிக் காலத்தில் அதாவது கி.மு.43,71,101ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது.

**மொழி:** தமிழ் மொழி.

**வழிபாட்டு நிலையம்:** 108 வகைத் திருப்பதிகள், 243 வகைச் சத்தி பீடங்கள், 1008 வகைச் சிவாலயங்கள்.

**இந்துமத நூல்கள்:**

| | | |
|---|---|---|
| பூசைமொழி நூல்கள் | - | 108 |
| பூசைவிதி நூல்கள் | - | 48 |
| தத்துவ நூல்கள் | - | 96 |
| செயல்சித்தாந்த நூல்கள் | - | 144 |
| குருபீட நூல்கள் | - | 36 |
| ஆக மொத்தம் | - | 432 நூல்கள். |

**இந்துமதப் பயன்கள்:** தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு எனும் நான்கையும் வடிவப்படுத்தி வளமான வாழ்வு பெறச் செய்தல்.

**இந்து மதம் என்பது முன்னோர் வழிபாடு, மூத்தோர் வழி நடத்தல்.**

**அறவி, உறவி, துறவி, மறவி எனும் நான்கு வகையிலும் வாழ்வது மத வாழ்வு.**

**அருவம், அருவுருவம், உருவ அருவம், உருவம் எனும் நான்கு வகை வழிபாடும் பயனுடையனவே.**

*__ஆதாரம்:__ மூலப் பதினெண்சித்தர் பீடாதிபதி ஆதிசிவனாரின் குருபாரம்பரியம்.



**தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்கள்** தமிழின மொழி மத விடுதலை இயக்கத் தலைவராகவும், இந்துவேத நாயகமாகவும் செயல்பட்டுத் தமிழினத்தின் இந்துமத அருட்பேரரசான பிற்காலச் சோழப் பேரரசை (கி.பி.785 - 1279) உருவாக்கினர்.

இவருக்கு அடுத்து 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் அவர்களின் குருவாணைப்படி இந்து வேத இலக்கியங்கள் இதில் வெளியிடப் படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் எழுத்து மங்கிக் கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாக வழங்கப் படுகின்றன.



அம்மையப்பர்

Published under the Divine Grace of His Holiness 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the Indhu Ilakkiya Kazhagam (இந்து இலக்கியக் கழகம்), Arani, Thiruvallur Dt.
Printed by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609. at Sri Vignesh Printers, Madurai.

www.books.gurudevar.org Email: indhuism@gmail.com